ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1686/53 - 2011 ජනවාරි 01 වැනි සෙනසුරාදා - 2011.01.01
*1686/53 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் நியதிகளிலான அனுமதி*

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயம்) பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 7 இன் ஏற்பாட்டு நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் பணிப்புரைகளுக்கு உட்பட்ட விதத்தில் பின்வரும் இவ்வறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகிறது:-*

> *இலங்கையில் வதியும் எவரேனும் ஆள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்குடமைக் கம்பனியொன்று, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனியொன்றின் பங்குகளையும் வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் அரச நிறுவனங்களினாலும் வெளியிடப்பட்ட நாட்டிற்கான முறிகளையும் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக 2011, சனவரி 1 ஆந் திகதியிடப்பட்ட 1686/50 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட நிதி அமைச்சரின் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அனுமதி வழங்கப்படுகிறது.*

*இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக, "இலங்கையில் வதியும் ஆள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் " என்பதன் கருத்து 1972 ஆம் ஆண்டின் ஏப்பிறல் 21 ஆந் திகதிய 15007 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.*

*பி. எச். ஓ. சந்திரவன்ச,*
*செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.*

*இலங்கை மத்திய வங்கி,*
*கொழும்பு,*
*2011, சனவரி 01.*

*1 - 136*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*